**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.52/2024**

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 03 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 03.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செங்குட்டுவன் (PW–1 ) | வயது | : | 67 /2026 |
| க/த பெயர் | : | திரு. காத்தமுத்து | தொழில் | : | – |
| முகவரி | | கோட்டூர் தோட்டம் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ;–**

**1.** நானும், பிரதிவாதிகளும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். இறந்துபோன கந்தசாமிக்கு யார்யார் வாரிசுதாரர்கள் என்றால் மாலா என்ற மனைவியும், அருண்குமார் என்ற மகனும் வாரிசுதாரர்கள் ஆவார்கள். வா.சா.ஆ–2 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்புவதற்கு முன்பே அனைத்து விபரங்களையும் என்னிடம் உள்ள ஒப்பந்த ஆவணம் வா.சா.ஆ–1ஐ காண்பித்து வழக்கறிஞர் அறிவிப்பு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ–2 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பின் 2வது பக்கத்தில் என்னுடைய கட்சிக்காரர் தயார் செய்து வைத்துக்கொண்டு தாங்கள் பலமுறை அணுகி கிரய சாசன பதிவிற்கு அழைத்தபோது தங்களின் சொத்து பத்திரம் அடமானம் இருப்பதாவும், அதனை மீட்ட உடன் பத்திர பதிவு செய்து தருவதாக எனது கட்சிக்காரரிடம் சொல்லியுள்ளீர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து அடமானம் வைக்கப்பட்டதாக கிரய ஒப்பந்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்பது குறித்து எவ்விதமான ஷரத்துக்களும் இந்த அறிவிப்பில் இல்லை என்றால் சரிதான். கந்தசாமி

எப்பொழுது இறந்தார் என்றால் 2021ம் வருடம் இறந்தார். தாவா சொத்துக்கு உரிய பட்டாவானது நிபந்தனையுடன் கூடிய பட்டா என்றால் அடமானத்தில் இருந்ததால் பட்டாவை பார்க்கவில்லை. பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது.

4. ஒப்பந்த ஆவணம் எழுதுவதற்கு பத்திரம் வாங்கும்போது வாங்குபவரின் பெயரில் வாங்கவேண்டும் அல்லது பெறுபவரின் பெயரில் வாங்க வேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணமானது மேற்கண்ட இரண்டு நபர்கள் பெயரிலும் வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணமானது பத்திரம் யாரிடம் வாங்கப்பட்டது, எந்த தேதியில் வாங்கப்பட்டது என்ற குறிப்புகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணமானது யார் பெயரில் வாங்கப்பட்டது யாரிடம் வாங்கப்பட்டது, எந்த தேதியில் வாங்கப்பட்டது என்ற எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

5. வா.சா.ஆ–1 ஆவணத்தில் யார் தட்டச்சு செய்தது என்றால் ஆப்பிள் நெட் சென்டரில் தட்டச்சு செய்யப்பட்டது. எத்தனை பக்கம் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் இரண்டு பக்கம். நான் வா.சா.ஆ–1 ஆவணத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் நான் கையெழுத்து எதுவும் இடவில்லை. கிரய ஒப்பந்த ஆவணம் ஏற்படும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் கார்த்திகேயன், முருகேசன், மாலா, அருண்குமார் மற்றும் நான் இருந்தோம். வா.சா.ஆ–1 ஆவணத்தில் கையெழுத்து போடாமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் நான் கார்த்திகேயனிடம் கொடுத்த பணத்திற்கு கேரண்டியாக எழுதி வாங்கியதால் நான் கையெழுத்திடவில்லை.

**6.** நான் நேரடியாக பிரதிவாதிகளிடம் பணம் கொடுக்கவில்லை என்றால் நான் கார்த்திகேயனிடம் கொடுத்தேன், அவர் கொடுத்தார். எனக்கும், பிரதிவாதகளுக்கும் ஒப்பந்தம் ஏதும் ஏற்படாததால் நான் வா.சா.ஆ–1 ஆவணத்தில் கையெழுதிடவில்லை என்றால் சரியல்ல, போடவில்லை அவசியம் இல்லை என்பதால் கையெழுத்திடவில்லை. பிரதிவாதிகள் என்னிடம் எப்போது கடன் கேட்டார்கள் என்றால் ஆகஸ்ட் 2022 ல் கேட்டார் தேதி ஞாபகம் இல்லை. எவ்வளவு கடன் கேட்டார்கள் என்றால் அவருடைய

நிலத்தை விற்பனைக்காக கேட்ட தொகையில் ரூ.90,000/– க்கு பேசி முடிக்கப்பட்டது.

7. ஒரு வாரத்திற்கு முன்பு பேசி முடிக்கப்பட்ட பின்னர் பத்திரம் ஏன் அந்த ஒரு வாரத்திற்குள் வாங்கவில்லை என்றால் பேசி முடிக்காததால் வாங்கவில்லை. வா.சா.ஆ–1 ஆவணம் எந்த ஊரில் வாங்கப்பட்டது என்றால் அந்த விபரம் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் திருச்சியில் வாங்கப்பட்டது என்றால் எனது மாப்பிள்ளை மன்னார்குடியில் வாங்கினார், அந்த நபர் எங்கு வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அந்த நபர் பத்திர எழுத்தரிடம் வா.சா.ஆ.1 ஆவணம் வாங்கினாரா? அல்லது வேறு நபரிடம் வாங்கினாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. நான் எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால் மதியம் 3.00 மணியளவில் ரூ.50,000/–ஐ 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். பணம் கொடுத்த சமயத்தில் தாவா சொத்தானது அடமானம் இருக்கும் விபரத்தை சொன்னார்களா என்றால் சொன்னார்கள். நான் சொல்லியதுபோல் வா.சா.ஆ.1 ஆவணம் எந்த காலத்திலும் ஏற்பட்டதில்லை என்றால் சரியல்ல. 2020ல் ஆதார் அட்டை கொடுத்தால்தான் பத்திரம் தருவார்கள் யாருடைய ஆதார் அட்டை கொடுத்து வா.சா.ஆ.1 ஆவணம் பெறப்பட்ட விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதுவதற்கு முன்பு தாவா சொத்திற்கான வில்லங்க சான்று பார்த்தேனா என்றால் இல்லை, கார்த்திகேயன் பொறுப்பேற்று கொண்டதால் நான் பார்க்கவில்லை. வில்லங்க சான்று வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாவா சொத்தானது 03.05.2018ல் ரூ.1,50,000/–க்கு அடமானம் வைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேலும் சில சொத்துக்கள் சேர்த்து அடமானம் வைக்கப்பட்டது. 03.05.2018ல் ரூ.1,50,000/–க்கு அடமானம் வைக்கப்பட்ட தாவா சொத்தை ஈன கிரயமான ரூ.90,000/–க்கு எனக்கு விற்பனை செய்ய வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்றால் சரியல்ல.

10. நான் தாவா சொத்திற்கு அருகே உள்ளேனா என்றால் ஆமாம். பக்கத்தில் உள்ள சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான ஆவணமான வா.சா.ஆ–1ஐ ஏற்படுத்தி அதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 29.10.2022 ல் ரூ.5,000/– பிரதிவாதிகளிடம் கொடுக்கப்பட்டதாக வா.சா.ஆ–1 ஆவணத்தில் மோசடியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1

ஆவணம் ஏற்பட்டு 2 வருடம் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே தாவா சொத்து தொடர்பாக எந்தவித ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றும், தாவா சொத்தை அபகரிக்க வேண்டி மோசடியான ஆவணங்கள் உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் மாறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் அனைத்தும் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக என்னால் போடப்பட்டுள்ள கையெழுத்துக்கள் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள பிரதிவாதிகளின் கையெழுத்தை பார்வையிட்டு வா.சா.ஆ–1 ஆவணத்தில் என்னால் மோசடியாக போடப்பட்ட கையெழுத்து என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். எவ்வளவு ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறார் என்றால் ரொம்ப நாட்களாக வேலை பார்த்து வருகிறார்.

வா.சா.ஆ–1 ஆவணம் ஏற்பட்ட தேதியன்று 2ம் பிரதிவாதி இந்தியாவில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:23:10 +0530

District Munsif
Mannargudi.